بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 1

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

வாராந்திர பத்திரிகை

# பதர்

காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 31

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

4 முஹர்ரம் 1438 ஹிஜ்ரி கமரி 6 இகா 1395 ஹிஜ்ரி ஷம்ஸி 6 அக்டோபர் 2016


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## எனது முன்னறிவிப்புகளுக்குப் பிறகு உலகில் பூகம்பங்கள் மற்றும் ஏனைய பேரழிவுகளின் தொடர் ஆரம்பமாகியிருப்பது எனது உண்மைக்கான ஓர் அடையாளமாகும்.

**நினைவில் கொள்ளுங்கள். இறைவனின் ஒரு தூதர் பொய்ப்படுத்தப்படும்போது குறிப்பிட்ட ஒரு சமுதாயம் அவரைப் பொய்ப்படுத்தினாலும் சரி அல்லது பூமியின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் [உள்ளவர்கள்] அவரைப் பொய்ப்படுத்தினாலும் சரி இறைவனின் தன்மான உணர்வானது பொதுவான தண்டனையை இறக்குகிறது. விண்ணிலிருந்து பொதுவாக துன்பங்கள் இறங்குகின்றன.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்களின் கூற்றுகளிலிருந்து...

*கேள்வி (5) :* தாங்கள் பல்வேறு இடங்களில் பல பிரசுரங்களில் மார்க்கத்திலுள்ள சீர்கேடுகளின் காரணமாக உலகில் தண்டனை இறங்குவதில்லை. மாறாக, தற்பெருமை, தீங்கு விளைவித்தல், தூதர்களைப் பரிகாசம் செய்வது ஆகியவற்றின் காரணமாக தண்டனை வருகின்றது என்று எழுதியுள்ளீர்கள். இப்போது ஸான்ஃபிரான்ஸிஸ்கோ போன்ற இடங்களில் வந்துள்ள பூகம்பங்களை தாங்கள் உங்களது உண்மைக்கான அடையாளமாக கூறியுள்ளீர்கள். இந்த பூகம்பங்கள் உங்களை பொய்ப்படுத்தியதன் காரணமாகத்தான் வந்தனவா ? என்ற விஷயத்தைப் புரிய முடியவில்லை.

*பதில் :* ஸான்ஃபிரான்ஸிஸ்கோ போன்ற இடங்களில் வந்துள்ள இந்த எல்லா பூகம்பங்களும் என்னை பொய்ப்படுத்தியதன் காரணமாக மட்டுமே வந்திருக்கின்றன. வேறு எந்தவொரு விஷயமும் இதற்கு காரணமாக இருக்கவில்லை என்று நான் ஒருபோதும் கூறவில்லை. எனினும், என்னை பொய்ப்படுத்தியது இந்த பூகம்பங்கள் நிகழ்வதற்குக் காரணமாக இருந்திருக்கின்றது. விஷயம் என்னவென்றால் இறைவனின் எல்லா நபிமார்களும் இந்த விஷயத்தில் ஒருமித்த கருத்துடையவர்களாக இருக்கின்றனர். அதாவது அல்லாஹ்வின் நடைமுறை எப்போதும் இவ்வாறே இருந்து வருகின்றது. உலகம் எல்லா வகையான பாவங்களையும் செய்கின்றது. உலகில் உள்ளவர்கள் செய்கின்ற பல பாவங்களும் ஒன்று சேர்கின்றபோது அந்தக் காலத்தில் இறைவன் தன் தரப்பிலிருந்து ஒருவரை அனுப்பி வைக்கின்றான். உலகின் ஏதாவதொரு பகுதியில் உள்ளவர்கள் அவரை பொய்ப்படுத்துகின்றனர். அப்போது அவர் அனுப்பப்படுவது முதலிலேயே குற்றவாளிகளாக ஆகி விட்ட ஏனைய தீங்கிழைக்கின்ற மக்களுக்கு தண்டனை கொடுப்பதற்காகவும் ஒரு தூண்டுகோலாக இருக்கின்றது. எந்த நபர் தனது சென்ற கால பாவங்களுக்கான தண்டனையை பெறுகின்றாரோ அந்தக் காலத்தில் இறைவன் புறமிருந்து ஒரு நபி அல்லது தூதர் வந்துள்ளார் என்பதைப் பற்றிய அறிவு அவருக்கு இருக்க வேண்டும் என்பது கண்டிப்பானதல்ல. இதைப் பற்றி அல்லாஹ் وَمَا كُنَّا مُعَذِّبِينَ حَتّٰى نَبْعَثَ رَسُولًا நாம் (எந்த சமுதாயத்திற்கும் அவர்களிடம்) ஒரு தூதுரை அனுப்பாத வரை ஒருபோதும் தண்டனையை அனுப்புவதில்லை என்று கூறுகின்றான். (17:16)

என்னைப் பொய்ப்படுத்துவது இந்த பூகம்பங்கள் வருவதற்கான காரணமாக இருக்கலாம் என்பதே நான் கூற வந்ததன் கருத்தாகும். தொன்றுதொட்டே இதுவே அல்லாஹ்வின் நடைமுறையாக இருந்திருக்கின்றது. இதை எவரும் மறுக்க முடியாது. எனவே, ஸான்ஃபிராஸிஸ்கோ போன்ற இடங்களில் வசிப்பவர்கள் பூகம்பங்கள் மற்றும் ஏனைய பேரழிவுகளின் காரணமாக அழிந்து விட்டனர் என்றால் அவர்கள் மீது தண்டனை இறங்குவதற்கான அசல் காரணம் அவர்கள் செய்த கடந்த காலப் பாவங்களாக இருந்தாலும் அவர்களை அழிக்கின்ற இந்த பூகம்பங்கள் எனது உண்மைக்கும் ஒரு அடையாளமாக இருக்கின்றது. ஏனென்றால், தொன்றுதொட்டே இருந்து வருகின்ற அல்லாஹ்வின் நடைமுறைக்கேற்ப தீங்கிழைக்கின்ற மக்கள் ஒரு தூதர் வருகின்ற சமயத்தில் அழிக்கப்படுகின்றனர். நான் பராஹீனே அஹ்மதிய்யாவிலும் எனது பல்வேறு நூல்களிலும் எனது காலத்தில் உலகில் வழக்கத்திற்கு மாற்றமான பல பூகம்பங்கள் வரும். ஏனைய பேரிழவுகள் கூட ஏற்படும் என்ற செய்தியை தெரிவித்திருந்தேன். இதுவும் பூகம்பங்கள் வருவதற்கு ஒரு காரணமாக இருக்கின்றது. எனவே, எனது முன்னறிவிப்புகளுக்குப் பிறகு உலகில் பூகம்பங்கள் மற்றும் ஏனைய பேரழிவுகளின் தொடர் ஆரம்பமாகி இருப்பது எனது உண்மைக்கான ஓர் அடையாளமாக இருக்கின்றது என்பதில் என்ன சந்தேகம் இருக்கின்றது ? நினைவில் கொள்ளுங்கள். இறைவனின் தூதர் பூமியின் எந்தவொரு பகுதியில் பொய்ப்படுத்தப்பட்டாலும் அவர் பொய்ப்படுத்துகின்ற அந்த சமயத்தில் வேறு நாடுகளில் வசிக்கின்ற ஏனைய குற்றவாளிகளும் கூட பிடிக்கப்படுகின்றனர். அவர்களுக்கு இந்த தூதர் பற்றிய செய்தி கூட தெரிந்திருக்காது. உதாரணமாக, நூஹ் நபியின் காலத்தில் இதுதான் நடந்தது. ஒரு சமுதாயம் அவரை பொய்ப்படுத்தியதன் காரணமாக ஓர் உலகின் மீதே தண்டனை வந்தது. இன்னும் சொல்வதென்றால், பறவைகள் மற்றும் விலங்குகள் கூட இந்த தண்டனைக்கு வெளியில் இருக்கவில்லை.

சுருக்கமாக, அல்லாஹ்வின் நடைமுறை இவ்வாறே இருந்து வருகின்றது. அதாவது, ஓர் உண்மையாளர் அளவுக்கு அதிகமாக பொய்ப்படுத்தப்படும் போது அல்லது அவருக்கு தொல்லைகள் தரப்படும்போது உலகில் பல வகையான துன்பங்கள் வருகின்றன. இறைவனின் எல்லா வேதங்களும் இதையே எடுத்துக் கூறுகின்றன. திருக்குர்ஆனும் கூட இதையே கூறுகின்றது. உதாரணமாக, ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களை பொய்ப்படுத்தியதன் காரணமாக எகிப்து நாட்டில் பல்வேறு வகையான பேரழிவுகள் இறங்கின;

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**அல்லாஹ்வின் அருளால் இன்றிலிருந்து மூன்று நாட்களுக்கு ஜெர்மனி அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு தனது ஆண்டு மாநாட்டை நடத்துவதற்கான நல்வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. ஜுமுஆவுடன் ஆண்டு மாநாடு ஆரம்பமாகின்றது.**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அல்லாஹ்விடமிருந்து கட்டளையைப் பெற்று இந்த மாநாடுகளை நடத்த ஆரம்பித்தார்கள். இதன் நோக்கம் ஜமாஅத்திலுள்ள நபர்களின் சீர்திருத்தமாக இருந்தது. இதன் நோக்கம் அவர்களை இறைவன் பக்கம் ஈர்த்துக் கொண்டு வர முயற்சி செய்வதாகும். அறிவிலும் இறை ஞானத்திலும் முன்னேறுவதாகும். தூய மாற்றங்களை உருவாக்கி அவற்றை தமது வாழ்வின் அங்கமாக ஆக்குவதாகும். உலக விருப்பங்களிலிருந்தும் வீணானவற்றிலிருந்தும் சுயமே தவிர்ந்திருப்பதாகும். இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை உலகில் பரப்புவதற்காக உடன்படிக்கை செய்தவாறு அதனை தனது எல்லா வகையான தகுதிகள் மற்றும் ஆற்றல்களின் மூலமாக நிறைவேற்றுவதாகும். பரஸ்பரம் ஒருவர் மற்றவர் மீது வைத்திருக்கும் அன்பு, நேசம் மற்றும் சகோதரத்துவத்தின் உறவை வளர்ப்பதாகும். முன்னோர்கள் இந்தப் பணியைச் சிறப்பாகச் செய்தனர். காதியான் என்ற குக்கிராமத்தில் நடைபெற்ற மாநாடுகளில் அல்லாஹ் எந்த அளவு பரக்கத்தை அருளினான் என்றால் இன்று இந்த வடிவத்தில் ஏறக்குறைய உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் எங்கெல்லாம் ஜமாஅத் நிறுவப்பட்டிருக்கின்றதோ அங்கு மாநாடுகள் நடக்கின்றன. காதியானில் நடைபெற்ற மாநாட்டின் நோக்கங்களாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறியவையே இந்த மாநாட்டின் நோக்கங்களாகும். அதைப் பற்றி இப்போது நான் சுருக்கமாக எடுத்துக் கூறினேன்.

சுற்றுச்சூழல் எவ்வளவு தான் தூய்மையானதாக இருந்தாலும் மனிதன் ஷய்த்தானின் தாக்குதல்களிலிருந்து தப்பிப்பதற்கு எல்லா சமயத்திலும் துஆ செய்து கொண்டிருக்க வேண்டும். முன்னெச்சரிக்கையுடன் இதன் பக்கம் தனது கவனத்தை செலுத்த வேண்டும்.

அல்லாஹ் ஹஜ் செய்பவர்கள் மூன்று தீமைகளிலிருந்து அதாவது ரஃபஸ (தீயவற்றைப் பேசுவது), ஃபுஸூக் (கட்டுப்பட்டு நடப்பதிலிருந்து வெளியேறுவது) மற்றும் ஜிதால் (சண்டையிடுதல்) ஆகியவற்றிலிருந்து தவிர்ந்திருப்பதன் பக்கம் குறிப்பாக கவனமூட்டியுள்ளான். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு கூறினார்கள்: 'நமது மாநாடுகளிலும் கூட இந்த சிந்தனையுடன் மக்கள் வந்தால், ஹஜ்ஜின் போது தீமைகளிலிருந்து தவிர்ந்திருப்பதற்கு எந்த வழிமுறைகளை அல்லாஹ் கூறியுள்ளானோ அதை கடைபிடிக்கும் சிந்தனையுடன் வந்தால் அசாதாரண சீர்திருத்தம் அவர்களிடம் ஏற்படும்.'

மாநாட்டின் அந்தஸ்து ஹஜ்ஜின் அந்தஸ்தாகும் என்று நாங்கள் கூறவில்லை. ஆனால், மார்க்கத்தின் முன்னேற்றத்திற்காகவும் நமது சீர்திருத்தத்திற்காகவும் இவை அடிப்படையான விஷயங்களாகும். இவற்றை அல்லாஹ் எடுத்துக் கூறியுள்ளான். எங்கு மக்கள் அதிகமாக ஒன்று கூடுகின்றனரோ, பெருங்கூட்டம் இருக்குமோ அங்கு இந்த விஷயங்களையும் கருத்தில் கொள்ளுங்கள் என்று அவன் கூறியுள்ளான். மார்க்க முன்னேற்றத்திற்காகவும் நமது சீர்திருத்தத்திற்காகவும் நாம் ஒன்று கூடுகின்ற இந்த மாநாடுகளில் இந்த விஷயங்களை நாம் கருத்தில் கொண்டால் நமது சீர்திருத்தத்தின் தரம் உயரும். மாநாடு ஒரு இறை வணக்கம் அல்ல என்பது உண்மை தான். ஆனால், கண்டிப்பாக அது ஒரு பயிற்சி முகாம் ஆகும். ஆன்மீகத்தில் முன்னேறுவதற்காக அது நடத்தப்படுகின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மாநாட்டின் நோக்கங்களாக எவற்றை கூறியிருந்தார்களோ உண்மையில் அவை இந்த மூன்று விஷயங்களைத்தான் சுற்றி சுற்றி வருகின்றன. அதாவது, நம்மை சீர்திருத்துவதற்கான சந்தர்ப்பம் நமக்கு கிடைக்க வேண்டும். நமது ஆன்மாவின் சீர்திருத்தம் ஏற்பட வேண்டும். வீணானவற்றிலிருந்து நாம் தவிர்ந்திருக்க வேண்டும். அல்லாஹ்வின் பக்கம் கவனம் உருவாக வேண்டும். அவனது கட்டளைகளுக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு நடப்பதன் பக்கம் குறிப்பான கவனம் உருவாக வேண்டும். மேலும் தமது சகோதரர்களுடன் அன்பு மற்றும் சகோதரத்துவத்தின் குறிப்பான உறவு நிலைநாட்டப்பட வேண்டும். எல்லா விதமான சுயநலத்தையும் சண்டைகளையும் முடிவுக்கு கொண்டு வர வேண்டும்.

மாநாட்டிற்கு வருகின்ற நம்மிடம் இந்த நாட்களில் எத்தகைய தூய மாற்றம் உருவாக வேண்டும் என்றால் மாநாட்டின் நாட்களில் மட்டுமல்லாமல் அதற்குப் பிறகும் நமது நட்பில் அமர்பவர்கள் எப்போதும் வீணானவற்றிலிருந்து விலகியிருப்பவர்களாக இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கட்டளைகளின் ஒளியில் வீணானவற்றிலிருந்து தவிர்ந்திருப்பது, அழகிய நல்லொழுக்கத்தை வெளிப்படுத்திக் காட்டுவது, நாவை வீணான விஷயங்களைப் பேசுவதிலிருந்தும் தூய்மையாக வைப்பது, தொழுகையில் உருக்கத்தை உருவாக்குவது ஆணவத்திலிருந்து தவிர்ந்திருப்பது, ஒவ்வொருவரிடமும் அனுதாபம் காட்டுவது போன்ற விஷயங்கள் தொடர்பாக ஹுஸூர் அவர்கள் கூறியுள்ள போதனைகள்

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **ஜெர்மனியிலுள்ள Karlsruhe -வில்**
**2 செப்டம்பர் 2016** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு **2 தபூக்** மாதம் ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ. بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ. اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. إِيَّاكَ نَعْبُدُ
وَ إِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.

அல்லாஹ்வின் அருளால் இன்றிலிருந்து மூன்று நாட்களுக்கு ஜெர்மனி அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு தனது ஆண்டு மாநாட்டை நடத்துவதற்கான நல்வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. ஜுமுஆவுடன் ஆண்டு மாநாடு ஆரம்பமாகின்றது. ஜமாஅத் சகோதரர்களின் சீர்திருத்தத்திற்காக ஆண்டு மாநாட்டை நடத்துவதற்காக அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அடித்தளமிட்ட அந்த முதலாவது மாநாடு நடந்து இந்த வருடம் 125 வருடங்கள் நிறைவடைய இருக்கின்றது.

காதியான் என்ற குக்கிராமத்தில் நடைபெற்ற அந்த மாநாடு பள்ளிவாயிலின் ஒரு பகுதியில் 75 நபர்கள் தங்களிடம் தூய மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் உலகின் சீர்திருத்தத்திற்காகவும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உதவியாளர்களாக இருந்து இஸ்லாத்தின் தூதுச் செய்தியை உலகில் பரப்புவதற்கும் செய்த உடன்படிக்கையின் விளைவை இன்று நாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். (ஆயினாயே கமாலாத்தே இஸ்லாம். ரூஹானி கஸாயின் தொகுதி 5, பக்கம் 629)

அல்லாஹ் அவர்களது பணியிலும் அவர்களது எண்ணத்திலும் எந்த அளவு பரக்கத்தை தந்தான் என்றால், இன்று ஜெர்மனி அஹ்மதிய்யா ஜமாஅத் நமக்கு கிடைக்கின்ற பெரும் பெரும் ஹால்கள் மற்றும் காம்ப்ளெக்ஸ்களிலிருந்து மிகவும் விரிவான பரப்பளவைக் கொண்ட ஒரு முழுமை பெற்ற பரந்த காம்ப்ளெக்ஸில் தனது ஆண்டு மாநாட்டை நடத்திக் கொண்டிருக்கின்றது. இந்த விரிவான கட்டடம் இருந்தும் கூட சில தேவைகளுக்காக வெளியில் திறந்த மைதானத்தில் கூடாரங்களும் அமைக்கப்பட்டுள்ளன. உலக வசதிகளின் அடிப்படையில் நாம் பார்ப்பதாக இருந்தால் இவ்வளவு பரந்த அளவில் செலவு செய்வது என்பது நமக்கு இன்றும் கூட சாத்தியமானதல்ல. ஆனால், அல்லாஹ் ஜமாஅத்தின் பைசாக்களில் அருள் புரிகின்றான். அதன் காரணமாக அல்லாஹ் நமக்கு இங்கு ஆண்டு மாநாட்டை நடத்துவதற்கான நல்வாய்ப்பை வழங்கிக் கொண்டிருக்கின்றான். (மாநாட்டுத் திடலின் அமைப்பாளர்கள் Echo Sound கேட்பதால் குரல் கடைசியில் அமர்ந்திருப்பவர்கள் வரை சரியாக சென்று சேர்கிறதா என்று பாருங்கள்.)

நான் ஏற்கனவே கூறியது போன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அல்லாஹ்விடமிருந்து கட்டளையைப் பெற்று இந்த மாநாடுகளை நடத்த ஆரம்பித்தார்கள். இதன் நோக்கம் ஜமாஅத்திலுள்ள நபர்களின் சீர்திருத்தமாக இருந்தது. (ஆயினாயே கமாலாத்தே இஸ்லாம். ரூஹானி கஸாயின் தொகுதி 5, பக்கம் 611) இதன் நோக்கம் அவர்களை இறைவன் பக்கம் ஈர்த்துக் கொண்டு வர முயற்சி செய்வதாகும். அறிவிலும் இறை ஞானத்திலும் முன்னேறுவதாகும். தூய மாற்றங்களை உருவாக்கி அவற்றை தமது வாழ்வின் அங்கமாக ஆக்குவதாகும். உலக விருப்பங்களிலிருந்தும் வீணானவற்றிலிருந்தும் சுயமே தவிர்ந்திருப்பதாகும். இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை உலகில் பரப்புவதற்காக உடன்படிக்கை செய்தவாறு அதனை தனது எல்லா வகையான தகுதிகள் மற்றும் ஆற்றல்களின் மூலமாக நிறைவேற்றுவதாகும். பரஸ்பரம் ஒருவர் மற்றவர் மீது வைத்திருக்கும் அன்பு, நேசம் மற்றும் சகோதரத்துவத்தின் உறவை வளர்ப்பதாகும். (ஷஹாதத்துல் குர்ஆன். ரூஹானி கஸாயின் தொகுதி 6, பக்கம் 399) முன்னோர்கள் இந்தப் பணியைச் சிறப்பாகச் செய்தனர். காதியான் என்ற குக்கிராமத்தில் நடைபெற்ற மாநாடுகளில் அல்லாஹ் எந்த அளவு பரக்கத்தை அருளினான் என்றால் இன்று இந்த வடிவத்தில் ஏறக்குறைய உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் எங்கெல்லாம் ஜமாஅத் நிறுவப்பட்டிருக்கின்றதோ அங்கு மாநாடுகள் நடக்கின்றன. காதியானில் நடைபெற்ற மாநாட்டின் நோக்கங்களாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியவையே இந்த மாநாட்டின் நோக்கங்களாகும். அதைப் பற்றி இப்போது நான் சுருக்கமாக எடுத்துக் கூறினேன்.

நாம் இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக இன்று இங்கு ஒன்று கூடியிருக்கின்றோம் என்றால் நாம் நற்பாக்கியம் பெற்றவர்களாவோம். அதாவது, நாம் அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசுகளாவோம். ஒரு திருவிழா என்ற எண்ணத்துடன் இங்கு வந்திருக்கின்றோம் என்றால் அல்லது நம்மில் எவராவது ஒருவர் இந்த எண்ணத்துடன் வந்திருந்தாலும், அல்லாஹ் நம்மை ஒரு நல்ல நோக்கத்திற்காக ஒன்று கூடும்படி கூறினான். நாம் அதற்காக ஒன்று கூடினோம். ஆனால் நல்ல நோக்கங்களைப் பெறுவதற்குப் பதிலாக உலக விஷயங்களில் நாம் விழுந்து விட்டோம் என்றால் அது துர்பாக்கியமாகவே இருக்கும். எனவே, இங்கு வருகின்ற ஒவ்வோர் அஹ்மதியும் இந்த விஷயத்தைக் கண் முன் நிறுத்த வேண்டும். அதாவது, இந்த மூன்று நாட்களும் முற்றிலுமாக உலகத்துடன் உள்ள தொடர்பை நீங்கள் துண்டித்துக் கொள்ள வேண்டும். இதற்குப் பிறகும் கூட உலகில் நீங்கள் இருந்தாலும் உலகப் பணிகளில் ஈடுபட்டாலும் உலகப் பணிகளைச் செய்வதும் அவசியமானதாகும். அன்றாடம் தொழில் செய்ய வேண்டியதுள்ளது. வியாபாரம் இருக்கின்றது. இவை அவசியமானதாகும். ஆனால் அவ்வாறிருந்தும் இங்கு உங்களிடம் உருவான அந்த நன்மைகளைச் செய்து விட்டு இங்கிருந்து செல்லுங்கள். அதன் மூலம் நீங்கள் இறைவனின் அருள்களை ஈர்ப்பவர்களாக ஆகிக் கொண்டிருக்க வேண்டும். இந்த நாட்களில் கடமையான மற்றும் நஃபிலான இறை வணக்கங்களைத் தவிர இறைவனை நீங்கள் நினைவு கூர வேண்டும். இறைவனை நினைவு கூர்வதன் மூலம் எண்ணங்கள் தூய்மையாக இருக்கும். அல்லாஹ்வின் பக்கம் கவனம் இருக்கும். மனிதன் தீமைகளிலிருந்து தவிர்ந்திருப்பான். இதுவே, இறை வணக்கங்களின் நோக்கமும் ஆகும். இறைவனை நினைவு கூர்வது கட்டாயமாக நாம் நிறைவேற்ற வேண்டிய இறை வணக்கங்களின் பக்கம் நமக்கு கவனமூட்டிக் கொண்டிருக்கும். உண்மையான இறை வணக்கத்தின் மூலமாக அதாவது மனிதன் சரியான முறையில் இணை வணக்கம் செய்தால் அதன் மூலமாக இறைவனை நினைவு கூர்வதன் பக்கமும் கவனம் இருக்கும். எனவே, இந்த விஷயத்தை ஒவ்வொருவரும் நினைவில் கொள்ள வேண்டும்.

அல்லாஹ் இஸ்லாத்தில் இறை வணக்கத்தின் ஒரு தூணை (கடமையை) வைத்திருக்கின்றான். இது எல்லா நிலையிலும் ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையல்ல. ஆனால், இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் ஒவ்வொரு வருடமும் இந்த கடமையை நிறைவேற்றுகின்றனர். அதாவது, பைத்துல்லாஹ்விற்குச் சென்று ஹஜ்ஜை நிறைவேற்றுகின்ற கடமையை அவர்கள் செய்கின்றனர். சில நாட்களுக்குள் இந்த கடமை நிறைவேற்றப்படும் – இன்ஷா அல்லாஹ். எங்கு ஹஜ்ஜின் இறை வணக்கத்தின் பக்கம் கவனமூட்டியவாறு அல்லாஹ் முஸ்லிம்களிடம் உங்களது முழுமையான கவனத்தை அல்லாஹ்வின் பக்கம் செலுத்துங்கள். இது இல்லாமல் ஹஜ்ஜின் நோக்கம் நிறைவேறாது என்று கூறியுள்ளானோ அங்கு மக்கள் அதிகமாக ஓரிடத்தில் ஒன்று கூடுவதனால் சில தீமைகளும் உருவாகின்றன. ஹஜ்ஜின் சூழலின் காரணமாக ஹஜ் செய்கின்ற ஒவ்வொருவரிடமும் அந்த தூய்மையான சூழலின் காரணமாக இறைவனை நினைவு கூர்வது, தஸ்ஃபீஹ் செய்வது, இறைவனைப் புகழ்வது ஆகியவற்றை தவிர வேறு எந்தவொரு விஷயத்தைப் பற்றிய எண்ணம் அவருக்கு வர முடியாது என்றே நாம் எதிர்பார்க்கின்றோம். ஆனால், மனிதனது இயல்பை அறிந்துள்ள அல்லாஹ் இந்த சந்தர்ப்பத்தில் மூன்று தீமைகளின் பக்கமும் நமக்கு கவனமூட்டியுள்ளான். இவற்றிலிருந்து நீங்கள் தவிர்ந்திருக்க வேண்டும் என்று கூறியுள்ளான். எனவே, சுற்றுச்சூழல் எவ்வளவு தான் தூய்மையானதாக இருந்தாலும் மனிதன் ஷைத்தானின் தாக்குதல்களிலிருந்து தப்பிப்பதற்கு எல்லா சமயத்திலும் துஆ செய்து கொண்டிருக்க வேண்டும். முன்னெச்சரிக்கையுடன் இதன் பக்கம் தனது கவனத்தை செலுத்த வேண்டும். அல்லாஹ் ஹஜ் செய்கின்றவர்களிடம் எந்த மூன்று தீமைகளிலிருந்து தவிர்ந்திருக்கும்படி கவனமூட்டியிருக்கின்றானோ அவற்றில் முதலாவது தீமையை 'ரஃபஸ' என்று குறிப்பிடுகின்றான். இதற்கு வெட்கக்கேடான விஷயங்கள் என்று மொழியாக்கம் செய்யப்படுகின்றது. ஆனால் இதற்கு தீய சொற்களைக் கூறுவது, ஏசிப் பேசுவது, மோசமான வீணான விஷயங்களைப் பேசுவது, மோசமான கதைகளைக் கூறுவது, தேவையில்லாத வீணான விஷயங்களைப் பேசுவது, அரட்டை அடிப்பது, ஒன்றாக அமர்ந்து சபைகளைக் கூட்டுவது ஆகிய எல்லா பொருள்களும் இருக்கின்றன. இங்கு எல்லா வகையான தேவையில்லாத வீணான அரட்டை அடிக்கின்ற சபைகளில் கலந்து கொள்வது தடை செய்யப்பட்டிருக்கின்றது. ஹஜ்ஜிற்கு சென்று இத்தகைய விஷயங்களை யார் தான் செய்வார் என்று எவரும் கருத வேண்டாம். ஹஜ்ஜிற்கு செல்கின்ற ஒவ்வொருவரும் கலப்பற்ற தூய உள்ளத்துடன் தன்னிடமுள்ள அனைத்தையும் அல்லாஹ்வுக்கு அர்ப்பணிப்பவராக இருப்பார் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஹஜ்ஜிற்கு சென்றிருந்த சமயத்தில் ஓர் இளைஞர் என்னுடன் தவாஃப் செய்து கொண்டிருந்தார். தவாஃப் செய்தவாறு துஆ செய்வது மற்றும் இறைவனை நினைவு கூர்வது ஆகியவற்றில் ஈடுபடுவதற்குப் பதிலாக அவர் திரைப்படப் பாடல்களைப் பாடிக் கொண்டிருந்தார். இந்தியாவிலிருந்து அவர் ஹஜ்ஜிற்குச் சென்றிருந்தார். நீ என்ன செய்கின்றாய்? என்று நான் அவரிடம் கேட்டேன். அதற்கு அவர் ஹஜ்ஜில் என்ன துஆ செய்ய வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் எனக்கு எதுவும் தெரியாது. நாங்கள் வியாபாரிகளாக இருக்கின்றோம். கல்கத்தாவில் எங்களது பெரிய துணிக்கடை ஒன்று இருக்கின்றது. எங்களுக்கு போட்டியாக இன்னொரு பெரிய துணிக்கடை ஒன்று இருக்கின்றது. அவர்களிலும் பெரிய அளவில் வியாபாரம் செய்யும் மக்கள் இருக்கின்றனர். அந்தக் கடைக்கு சொந்தக்காரர்களாக இருந்தவர்களில் ஒருவர் ஹஜ் செய்து விட்டு வந்தார். அவர் தனது கடையின் போர்டில் தனது பெயருடன் ஹாஜி என்றும் எழுதியிருந்தார். இதன் காரணமாக மக்களுக்கு அந்தக் கடையின் பக்கம் அதிகமாக கவனம் ஏற்பட்டது. இது ஹாஜியினுடைய கடையாகும். நல்ல பொருளைத்தான் இவர் தருவார் என்று மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டது. அப்போது எனது தந்தையார் என்னிடம் என்னால் ஹஜ்ஜிற்கு செல்ல முடியவில்லை. எனது முதுமை அல்லது நான் நோயாளியாக இருப்பதன் காரணமாக என்னால் ஹஜ்ஜிற்கு செல்ல முடியவில்லை. நீ ஹஜ் செய்வதற்கு செல்ல வேண்டும். அதனால் நாமும் நமது போர்டில் ஹாஜி என்று எழுதலாம் என்று கூறினார். எனவே, எனது நோக்கம் இதுதான். நான் எனது தொழிலை வளர்ச்சியடையச் செய்வதற்காக ஹஜ் செய்கின்றேன் என்று அவர் கூறினார். எனவே, இந்த நோக்கத்திற்காக மக்கள் ஹஜ் செய்யச் செல்ல முடியும் என்றால் பிறகு வேறு இறை வணக்கம் அல்லது மாநாடு பற்றி என்னவெல்லாம் அவர்களால் சிந்திக்க முடியும்?

பிறகு அல்லாஹ் ஹஜ்ஜின் நாட்களில் 'ஃபுஸூக்' செய்யக் கூடாது என்று கூறியுள்ளான். அதாவது, கட்டுப்படுவதிலிருந்தும் கீழ்ப்படிந்து நடப்பதிலிருந்தும் வெளியேறி விடக் கூடாது. அல்லாஹ்வின் கட்டளைகளை ஏற்று நடக்க வேண்டும். எந்த நன்மையின் வழிகளை நீங்கள் கடைபிடித்திருக்கின்றீர்களோ அதை தொடர்ந்து கடைபிடிக்க வேண்டும். தீமைகளின் பக்கம் சாய்ந்து விடக் கூடாது. பிறகு அல்லாஹ் கூறுகின்றான்: ஹஜ்ஜின் நாட்களில் 'ஜிதால்' அதாவது எல்லா வகையான சண்டை சச்சரவுகளிலிருந்து முழுமையாகத் தவிர்ந்திருக்க வேண்டும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு கூறினார்கள்: "நமது மாநாடுகளிலும் கூட இந்த சிந்தனையுடன் மக்கள் வந்தால், ஹஜ்ஜின் போது தீமைகளிலிருந்து தவிர்ந்திருப்பதற்கு எந்த வழிமுறைகளை அல்லாஹ் கூறியுள்ளானோ அதை கடைபிடிக்கும் சிந்தனையுடன் வந்தால் அசாதாரண சீர்திருத்தம் அவர்களிடம் ஏற்படும்." (குத்பாத்தே மஹ்மூது தொகுதி 23 பக்கம் 566-567)

நிச்சயமாக அவர்கள் சீர்திருத்தத்திற்கான உண்மையான மிகவும் அடிப்படையான விஷயங்களைக் கூறியுள்ளார்கள். மாநாட்டின் அந்தஸ்து ஹஜ்ஜின் அந்தஸ்தாகும் என்று நாங்கள் கூறவில்லை. நாங்கள் காதியான் செல்வது அதற்கு ஹஜ்ஜிற்குரிய அந்தஸ்தை வழங்குவதற்காகத்தான் என்று அஹ்மதியல்லாத சிலர் நம்மீது ஆட்சேபனை செய்கின்றனர். அவ்வாறு ஒருபோதும் இல்லை. ஆனால், மார்க்கத்தின் முன்னேற்றத்திற்காகவும் நமது சீர்திருத்தத்திற்காகவும் இவை அடிப்படையான விஷயங்களாகும். இவற்றை அல்லாஹ் எடுத்துக் கூறியுள்ளான். எங்கு மக்கள் அதிகமாக ஒன்று கூடுகின்றனரோ, பெருங்கூட்டம் இருக்குமோ அங்கு இந்த விஷயங்களையும் கருத்தில் கொள்ளுங்கள் என்று அவன் கூறியுள்ளான்.

மார்க்க முன்னேற்றத்திற்காகவும் நமது சீர்திருத்தத்திற்காகவும் நாம் ஒன்று கூடுகின்ற இந்த மாநாடுகளில் இந்த விஷயங்களை நாம் கருத்தில் கொண்டால் நமது சீர்திருத்தத்தின் தரம் உயரும். மாநாடு ஓர் இறை வணக்கம் அல்ல என்பது உண்மை தான். ஆனால், கண்டிப்பாக அது ஒரு பயிற்சி முகாம் ஆகும். ஆன்மீகத்தில் முன்னேறுவதற்காக அது நடத்தப்படுகின்றது. இதில் நாம் தீய சொற்களைக் கூறுவது, ஏசிப் பேசுவது, கதைகளைக் கூறுவது போன்றவற்றை செய்தால் பிறகு மாநாட்டில் கலந்து கொள்வதன் நோக்கம் நிறைவேறாது. இந்த எல்லா விஷயங்களிலிருந்தும் நாம் தவிர்ந்திருக்க வேண்டும். நாம் இந்த விஷயங்களிலிருந்து தவிர்ந்திருந்தால், வீணான விஷயங்களைப் பேசுவதிலிருந்து விலகியிருந்தால் பிறகு அதன் மூலமாக நிச்சயமாக நிம்மதி நிறைந்த அமைதி நிறைந்த நன்மைகளைப் பரப்புகின்ற ஒரு சூழல் உருவாகும். அல்லாஹ்வுக்கு

கட்டுப்பட்டு நடப்பதிலிருந்து வெளியே சென்று விடுவதனால் ஏற்படும் பாவத்தைச் செய்வதிலிருந்து நாம் தவிர்ந்திருக்க வேண்டும். இது மிகவும் அவசியமானதாகும்.

நாம் முழுமையான முறையில் மார்க்க நோக்கத்திற்காக வந்திருக்கும்போது அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டு நடப்பதை நாம் எப்போதும் பேண வேண்டும். சுருக்கமாகக் கூறுவதென்றால், திருக்குர்ஆனின் போதனைகளை நாம் பேணி நடந்தவாறு இறைவனை வணங்குவதற்கான உரிமையையும் நாம் செலுத்த வேண்டும். மற்ற கட்டளைகளுக்கேற்பவும் செயல்பட வேண்டும். பிறகு தொடர்புகளை துண்டிப்பதற்கு காரணமாக இருக்கின்ற ஒரு செயல் இருக்கின்றது. இதன் காரணமாக பல வருடங்கள் வரை உறவுகள் முறிந்த நிலையில் இருக்கின்றன. சண்டைகள் நடந்து கொண்டே இருக்கின்றன. இவற்றிலிருந்தும் தவிர்ந்திருக்கும்படி இறைவன் கட்டளையிட்டுள்ளான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மாநாட்டின் நோக்கங்களாக எவற்றை கூறியிருந்தார்களோ உண்மையில் அவை இந்த மூன்று விஷயங்களைத்தான் சுற்றி சுற்றி வருகின்றன. அதாவது, நம்மை சீர்திருத்துவதற்கான சந்தர்ப்பம் நமக்கு கிடைக்க வேண்டும். நமது ஆன்மாவின் சீர்திருத்தம் ஏற்பட வேண்டும். வீணானவற்றிலிருந்து நாம் தவிர்ந்திருக்க வேண்டும். அல்லாஹ்வின் பக்கம் கவனம் உருவாக வேண்டும். அவனது கட்டளைகளுக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு நடப்பதன் பக்கம் குறிப்பான கவனம் உருவாக வேண்டும். மேலும் தமது சகோதரர்களுடன் அன்பு மற்றும் சகோதரத்துவத்தின் குறிப்பான உறவு நிலைநாட்டப்பட வேண்டும். எல்லா விதமான சுயநலத்தையும் சண்டைகளையும் முடிவுக்கு கொண்டு வர வேண்டும். மக்கள் பரஸ்பரம் ஒருவர் மற்றவரது உரிமையைச் செலுத்துவதன் பக்கம் கவனம் செலுத்தாமல் இருப்பதையும் சுயநலம் சில மக்களிடம் மிகைத்து விடுவதையும், சின்னச் சின்ன விஷயங்களில் வாக்குவாதம் மற்றும் சண்டைகள் உருவாகி விடுவதையும் பார்த்த ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது வெறுப்பை வெளிப்படுத்திக் காட்டியவாறு மாநாட்டையே ஒரு வருடம் நடத்தாமல் விட்டு விட்டார்கள். (ஷஹாதத்துல் குர்ஆன். ரூஹானி கஸாயின் தொகுதி 6, பக்கம் 394)

எனவே, மாநாட்டில் கலந்து கொள்கின்ற ஒவ்வொரு நபரும் எங்கு அவர் ஒவ்வொரு சின்னச்சின்ன விஷயத்திலும் கூட தன்னை சீர்திருத்திக் கொள்வதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டுமோ அங்கு அத்துடன் தமது நேரத்தை இங்குமங்கும் சென்று வீணாக்குவதற்குப் பதிலாக மாநாட்டில் கலந்து கொள்வதன் நோக்கத்தை நிறைவேற்றியவாறு மாநாட்டின் எல்லா நிகழ்ச்சிகளையும் கேட்க வேண்டும். ஒவ்வொரு சொற்பொழிவாளரின் சொற்பொழிவிலும் சீர்திருத்தம் மற்றும் நன்மையின் விஷயங்கள் கிடைக்கின்றன. எங்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை என்று எவரும் கூற முடியாது. எவ்வளவு பெரிய ஆலிமாக இருந்தாலும் கூட அவருக்கு கூட ஏதாவதொரு விஷயம் கிடைக்கின்றது அல்லது குறைந்தபட்சம் அவர் கேட்ட விஷயம் மீண்டும் அவருக்கு நினைவூட்டப்படுகின்றது. எனவே, இவற்றை கவனமாகக் கேட்க வேண்டும். தமது ஆன்மீகத்தை வளர்ச்சி அடையச் செய்வதற்காக அல்லாஹ்வை வணங்குவதற்குரிய உரிமையைச் செலுத்துங்கள். பிறகு இறைவனது அடியார்களுக்குரிய உரிமையைச் செலுத்துவதன் பக்கமும் கவனம் இருக்க வேண்டும். இங்கு சண்டை சச்சரவுகள் பற்றிய கேள்வியே எழாது. இந்த மாநாட்டிலிருந்து உண்மையான அருளைப் பெறுவதற்காகவும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் துஆக்களுக்கு வரிசாவதற்கு கடந்த காலங்களில் எவர்களுடன் பழைய சண்டைகள் நடந்து கொண்டிருக்கின்றதோ அவர்களும் கூட ஒருவர் மற்றவருக்கு முன்னால் வந்து சமாதானம் செய்தவாறு சண்டைகள் முடிவுக்கு கொண்டு வர வேண்டும். அது அல்லாமல் இங்கு வந்து சண்டைபோடுபவர்களுக்குத்தான் அது பொருந்தும் என்பது சரியல்ல. உங்களிடம் இருக்கின்ற 'தான்' என்ற அகந்தையை முடிவுக்கு கொண்டு வர வேண்டும். எனது அறிவில் இந்த விஷயம் இருக்கின்றது. அதாவது, ஒவ்வொரு வருடமும் ஆண்டு மாநாட்டின் போது சில பழைய விஷயங்களின் காரணமாக சில மக்களுக்கிடையில் சில குடும்பங்களுக்கிடையில் வருத்தப்பட வேண்டிய விஷயங்கள் நடந்துள்ளன. சில மக்கள் தங்களுக்கிடையில் சண்டையும் போடுகின்றனர். மாநாட்டின் போது ஒவ்வொருவரும் இங்கு வருகின்றார். வெறுப்படைந்துள்ள இரு பிரிவினர்களில் ஒரு பிரிவு மற்ற பிரிவை தமக்கு எதிரில் சந்திக்க நேர்கிறது. இங்கு ஒவ்வோர் அஹ்மதியும் வரவேண்டியதிருக்கின்றது. இவர் ஏன் மாநாட்டிற்கு வந்தார்? இவர் ஏன் வரவில்லை? என்று நம்மால் கேட்க முடியாது. வெறுப்படைந்த மக்கள் ஆண்களிலும் இருக்கின்றனர். பெண்களிலும் இருக்கின்றனர். இவர்களிடையே பழைய வெறுப்பு இருந்து வரும் நிலையில் இவர்களில் ஒருவர் மற்றவரை பார்க்கும்போது முறைத்துப் பார்க்கின்றனர். சில நேரங்களில் சில மக்கள் தொலைவில் இருந்தவாறே அல்லது நடந்து சென்று கொண்டிருக்கும் நிலையிலேயே பிறரை குத்திக்காட்டும் வகையில் எதையாவது கூறி விடுகின்றனர். ஆனால், நாங்கள் இவர்களைப் பற்றி எதுவும் கூறவில்லை. சாதரணமாகத்தான் இவ்வாறு கூறினோம் என்பதை வெளிப்படுத்தும் விதத்தில் அவர்கள் நடந்து கொள்கின்றனர். ஆனால், உண்மையில் மற்றவரைத் தூண்டுவதற்காக அல்லது வேண்டுமென்றே இவ்வாறு கூறி விடுகின்றனர்.

ஆக, ஒரு வீணான செயலின் காரணமாக இவர்கள் அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டு நடப்பதிலிருந்தும் விலகி வெளியே சென்று விடுகின்றனர். பிறகு நிலைமை சண்டை வரை சென்று விடுகின்றது. ஒருவருக்கு தமது உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியவில்லையென்றால் ஆண்டு மாநாட்டின் சூழலிலிருந்து விலகி சுயமே அவர் வெளியில் சென்று விடுவது சிறந்ததாகும். அவர் மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது. ஒரு சிலர்தான் இப்படி இருக்கின்றனர். ஜமாஅத்திற்கு அவப்பெயர் ஏற்படுவதற்கு அவர்கள் காரணமாக ஆகி விடுகின்றனர். மாநாட்டிற்கு வந்து மாநாட்டின் அருள்களிலிருந்து தமது பலனைப் பெற்றுக் கொள்வதற்குப் பதிலாக அல்லாஹ்வின் வெறுப்பைப் பெற்றுக் கொள்பவர்களாக அவர்கள் ஆகி விடுகின்றனர். ஒரு நல்ல நோக்கத்திற்காக ஒன்று கூடுகின்ற நம்பிக்கை கொண்டவர்கள் தங்களது ஆன்மீக முன்னேற்றம் மற்றும் நல்ல நோக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்குப் பகரமாக அவர்கள் குழப்பத்தை அதிகரிக்கக் கூடியவர்களாக ஆகுவதை எப்போதாவது அல்லாஹ் விரும்புவானா? அல்லாஹ் வெற்றி பெறுபவர்களைப் பற்றி கூறும்போது தங்களது தொழுகையில் பணிவை மேற்கொள்பவர்களைப் பற்றி கூறிய பிறகு வீணானவற்றிலிருந்து தவிர்ந்திருப் –பவர்கள் பற்றி கூறுகின்றான்.

அல்லாஹ் கூறுகின்றான்:

قَدْ اَفْلَحَ الْمُؤْمِنُوْنَ. الَّذِيْنَ هُمْ فِيْ صَلٰوتِهِمْ خَاشِعُوْنَ. وَالَّذِيْنَ هُمْ عَنِ اللَّغْوِ مُعْرِضُوْنَ

தங்களது தொழுகைகளில் பணிவை மேற்கொள்கின்ற நம்பிக்கை கொண்டவர்கள் வெற்றி பெற்று விட்டனர். அவர்கள் வீணானவற்றிலிருந்து தவிர்ந்திருப்பர். (23:2–4) நீங்கள் ஒரு நல்ல நோக்கத்திற்காக இங்கு வந்துள்ளீர்கள். தொழுகைகளில் ஏறக்குறைய ஒவ்வொரு நபரும் கலந்து கொள்கின்றார். ஆனால், அல்லாஹ் கூறுகின்றான்: பணிவை மேற்கொண்டவாறு தொழ வேண்டும். அல்லாஹ்வுக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு நடப்பவராக இருந்து தொழுகையை நிறைவேற்ற வேண்டும். வெளிப்படையான தொழுகையாக அவை இருக்கக் கூடாது. ஜமாஅத்தான தொழுகைகளின் ஒரு நோக்கம் இதுவுமாகும். அதன் மூலமாக ஒற்றுமை உருவாக வேண்டும். ஓர் உடலாக ஆகி இறைவன் முன்னிலையில் ஆஜராக வேண்டும். இவ்வாறே ஒருவரது ஆன்மீகமும் நன்மையும் மற்றவரிடம் ஊடுருவிச் செல்ல வேண்டும். அது அவருடன் ஒன்றிவிட வேண்டும். எவர்கள் பணிவை மேற்கொண்டவாறு தொழுகின்றனரோ, கலப்பற்ற தூய உள்ளத்துடன் அல்லாஹ்வின் முன்பு குனிகின்றனரோ அவர்களது தாக்கம் அவர்களுடன் நிற்கின்ற அவர்களை விட குறைந்த தகுதியில் இருப்பவர்கள் மீதும் கூட ஏற்படும். ஆனால், அல்லாஹ்வுக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு நடந்தவாறு தொழும்போதுதான், பணிவு இருந்தால்தான் இந்த தாக்கம் பிறரிடம் ஏற்படும். பலரும் எனக்கு எழுதுகின்றனர். மாநாட்டின் நாட்களில் பணிவுடனும் உருக்கத்துடனும் தொழப்படும் தொழுகைகளில் அவர்களுக்கு அதிகமாக இன்பம் கிடைக்கின்றது. இந்த இன்பத்தைப் பெறுவதற்கு ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும். அதன் மூலமாக வெற்றி பெற அந்த நம்பிக்கை கொண்டவர்களைச் சார்ந்தவர்களாக அவர்கள் ஆகி விட வேண்டும். ஆனால், அல்லாஹ் வெற்றி பெறுபவர்களுக்கென்று பல்வேறு வழிமுறைகளை ஏற்படுத்தியுள்ளான். இந்த வழிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலமாக உண்மையான முழுமையான வெற்றி கிடைக்கின்றது. நான் ஏற்கனவே ஓதிய வசனங்களிலிருந்து இதற்கான இரண்டாவது வழியாக அல்லாஹ் வீணானவற்றிலிருந்து விலகியிருப்பதைக் கூறுகின்றான். இதன் பக்கமும் ஒவ்வோர் அஹ்மதியும் மாநாட்டின் நாட்களின் போதும் அதற்கு பிறகும் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டும்.

'அல்லக்வ்' என்பதற்கு விளக்கமளித்தவாறு ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: இதில் எல்லா விஷயங்களும் வந்து விடுகின்றன. எல்லா வகையான பொய், எல்லா வகையான பாவம், சீட்டு விளையாட்டு, சூதாட்டம், அரட்டை அடித்தல், பழித்துரைத்தல் ஆகிய எல்லா விஷயங்களும் இதில் வந்து விடுகின்றன. (ஹகாயிகுல் ஃபுர்கான் தொகுதி 3, பக்கம் 171)


## சுத்தமான தேன் கிடைக்கும்

**ஆரோக்கியமான வாழ்விற்கு தேனியியல் மருந்து *(Honey Medicine)* கிடைக்கும்.**

**Dr. M.J. அக்பர் அலி**
B.Com., M.A., B.Ed., PGD Y&N, RMP (Homeo)
Institute of Honey bees' Medicine Education Research & Sales
101 B/1, First Floor, Nethaji Road, Melapalayam,
Tirunelveli - 627 005 Ph : +91 95006 62284


## திருக்குர்ஆனிலிருந்து

(மக்களை) நன்மையின் பக்கம் அழைக்கவும் நல்லவற்றைப் போதித்து தீமையைத் தடுக்கவும் செய்யும் ஒரு கூட்டம் (எப்போதும்) உங்களிடையே இருந்து வர வேண்டும். இவர்களே வெற்றி பெறுவோர். (3:105)


**A. பஷீர் அஹ்மது**
வக்ஃபே ஜதீது செயலர், மேலப்பாளையம். Ph : +91 98437 22215

சீட்டு விளையாட்டு மற்றும் சூதாட்டத்தின் உதாரணத்தை அவர்கள் கூறியுள்ளார்கள். இதைப் படித்ததும் வாட்ஸ்அப்பில் வந்துள்ள ஒரு புகைப்படம் எனக்கு நினைவில் வந்து விட்டது. சில மக்கள் மீது நல்ல சூழல் மற்றும் நல்ல புனித இடங்கள் கூட எந்த தாக்கத்தையும் ஏற்படுத்துவதில்லை. ஹஜ்ஜிற்கு சென்ற ஒருவரது உதாரணத்தை நான் குறிப்பிட்டிருந்தேன். எந்த புகைப்படத்தை நான் குறிப்பிடுகின்றேனோ அது பள்ளிவாயிலில் இஃதிகாஃப் அமர்ந்திருப்பவர்களின் புகைப்படமாகும். அதில் திருக்குர்ஆனை ஓதுபவர்கள், நபிமொழிகளைப் படிப்பவர்கள், வேறு நூல்களைப் படிப்பவர்களும் இருந்தனர். ஆனால் இத்தகைய மக்களும் அதில் இருந்தனர். அவர்கள் பள்ளிவாயிலில் அமர்ந்துள்ளனர். பள்ளிவாயிலின் சுற்றுச்சூழல் மிகவும் தெளிவாகத் தெரிகின்றது. அவர்கள் பள்ளிவாயிலில் அமர்ந்தவாறு சீட்டு விளையாடிக் கொண்டிருக்கின்றனர். எழுதுபவர் இந்தக் கமெண்டையும் எழுதியுள்ளார். இம்மக்கள் மஸ்ஜிது நபவியில் அமர்ந்திருக்கின்றனர். இதுதான் சில மக்களின் நிலையாகும். அவர்கள் இறை வணக்கங்களில் கூட வீணானவற்றில் ஈடுபடுவதிலிருந்து விலகியிருப்பதில்லை. அவ்வாறிருந்தும் இவர்கள் உறுதியான முஸ்லிம்களாகவும் அஹ்மதிகள் காஃபிர்களாகவும் இருக்கின்றனர். இந்த மக்கள் செயலளவில் அல்லாஹ்வையும் பரிகாசம் செய்கின்றனர். இவர்களை விட வேறு யார் அநியாயக்காரராக இருக்க முடியும்? இந்த முன்மாதிரியை அந்நியர்களிடம் பார்க்கும்போது நாம் அதிலிருந்து படிப்பினையைப் பெற வேண்டும். நம்மிடம் அத்தகைய விஷயங்கள் உருவாகி விடக் கூடாது. அத்துடன் நாம் அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்வதற்கான நல்வாய்ப்பை அவன் நமக்கு வழங்கினான். அன்னார் மீண்டும் மீண்டும் நமக்கு இந்த வீணானவற்றிலிருந்து தவிர்ந்திருப்பதன் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள்.

வீணானவற்றைப் பற்றி குறிப்பிட்டவாறு ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ''வீணான வேலைகள், வீணான பேச்சுக்கள், வீணான செயல்கள், வீணான சபைகள், வீணான நட்புகள், வீணான தொடர்புகள் மற்றும் வீணான உணர்வுகளிலிருந்து விலகி இருப்பவர்களே இரட்சிப்பைப் பெற்ற நம்பிக்கை கொண்டவர்கள் ஆவர்.'' (ஸமீமா பராஹீனே அஹ்மதியா ஐந்தாம் பாகம் ரூஹானி கஸாயின் தொகுதி 21 பக்கம் 198)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எல்லா வகையான வீணான விஷயங்களையும் நமக்கு அடையாளம் காட்டியுள்ளார்கள். எந்தெந்த விஷயங்களைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் குறிப்பிட்டுக் கூறியுள்ளார்களோ அவற்றில் ஒன்று மற்றொன்றுடன் இணைந்திருக்கின்றது. ஒரு வீணான செயல் இன்னொரு வீணான செயலின் பக்கம் நம்மை கொண்டு செல்கின்றது. நாம் சிந்தித்துப் பார்த்தால் வீணான வேலையும், வீணான பேச்சுக்களும், வீணான செயல்களும் எவர்கள் மூலமாக நிகழ்கின்றதோ அவர்கள் வீணான சபைகளில் அமர்கின்றவர்களாக இருக்கின்றனர். வீணான விஷயங்களில் ஈடுபடுகின்ற மக்களது நட்பில் இருப்பதினாலும் அவர்களை சந்திப்பதனாலும் இவை உருவாகின்றன. வீணான உணர்வுகள் அதாவது சிறு சிறு விஷயங்களுக்காக கோபப்படுவது இவற்றின் மூலமாகவே உருவாகின்றன. இஃதிகாஃபில் அமர்ந்தவாறு சீட்டு விளையாடுபவர்களைப் பற்றிய உதாரணத்தை நான் கூறினேன். பள்ளிவாயிலில் அமர்ந்திருக்கின்றனர்; இஃதிகாஃபில் அமர்ந்திருக்கின்றனர் என்றே கூறப்படுகின்றது. ஆனால், இறை வணக்கத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு பகரமாக வீணான விஷயங்களில் அவர்கள் மூழ்கி விட்டனர். இவர்களுடன் அமர்பவர்களும் இத்தகைய மக்களாகத்தான் இருப்பர். அவர்கள் பள்ளிவாயில்களில் அமர்ந்திருந்தாலும் அத்தகைய மக்களின் நட்பு மோசமான விளைவை ஏற்படுத்துகின்றது. ஆனால், மாநாட்டிற்கு வருகின்ற நம்மிடம் இந்த நாட்களில் எத்தகைய தூய மாற்றம் உருவாக வேண்டும் என்றால் மாநாட்டின் நாட்களில் மட்டுமல்லாமல் அதற்குப் பிறகும் நமது நட்பில் அமர்பவர்கள் எப்போதும் வீணானவற்றிலிருந்து விலகியிருப்பவர்களாக இருக்க வேண்டும். அது எத்தகைய சபைகளாக இருக்கின்றனவென்றால் அவர்களுடன் அமர்பவர்கள் இழப்பிற்குரியவர்களாக ஆகுவதில்லை. அவர்கள் அல்லாஹ்விடம் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற மக்களாக இருக்கின்றனர். நமது ஒழுக்கம் உயர்வானதாக இருக்க வேண்டும். நமது உண்மையின் தரம் உயர்வானதாக இருக்க வேண்டும். அவை நமது செயலளவிலான முன்மாதிரிகளைப் பார்க்கின்ற மற்றவர்களிடமும் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியவையாக இருக்க வேண்டும்.

ஓரிடத்தில் நமக்கு போதனை செய்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ''இன்னொரு விஷயமும் அவசியமானதாகும். அதை நமது ஜமாஅத் நினைவில் கொள்ள வேண்டும். அது என்னவென்றால் நாவை வீணான விஷயங்களைப் பேசுவதிலிருந்து தூய்மையாக வைக்க வேண்டும்.''

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''நாவு நமது இருப்பின் முற்றமாக இருக்கின்றது. நாவை தூய்மையாக வைத்திருப்பதன் மூலமாக இறைவன் நமது இருப்பின் முற்றத்திற்கு வந்து விடுகின்றான். இறைவன் முற்றம் வரை வந்து விட்டால் பிறகு அவன் உள்ளே வருவதில் என்ன வியப்பு இருக்கின்றது? (மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 245-246; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) (அதாவது ஒரு வீட்டின் முக்கிய நுழைவாயிலை அன்னார் குறிப்பிடுகின்றார்கள்.) இறைவன் உங்கள் வீட்டிற்கு அருகில் வந்து விட்ட பிறகு வீட்டின் வாசலில் வந்து விட்ட பிறகு எவ்வகையிலும் அவன் உள்ளே நுழைவது தொலைவில் இல்லை. அவன் உள்ளே வருவதைப் பற்றி எவரும் வியப்படைய முடியாது. எனவே, அல்லாஹ் வீணானவற்றிலிருந்து விலகி இருப்பவர்கள், அழகிய ஒழுக்கத்தை வெளிப்படுத்திக் காட்டுபவர்கள், மென்மையான நாவை பயன்படுத்துபவர்கள் ஆகியோருக்கு அருகில் வந்து விடுகின்றான். எந்த அளவு நெருங்கி வந்து விடுகின்றான் என்றால் நன்மைகளை தொடர்ந்து முறையாக செய்து வந்தால் பிறகு அல்லாஹ் அத்தகைய மக்கள் மீது அருள் புரிந்தவாறு அவர்களை தனக்குப் பிரியமானவர்களாக ஆக்கிக் கொள்கின்றான். அல்லாஹ் வீட்டிற்குள் வருகின்றான் என்பது அல்லாஹ் இந்த அடியாரை தனக்குப் பிரியமானவராக ஆக்கிக் கொள்ளும்போது இறை வணக்கங்களில் முன்னேறுவதற்கும் நன்மைகளில் முன்னேறுவதற்கும் மனிதனுக்கு நல்வாய்ப்பு கிடைத்துக் கொண்டேயிருக்கும்.

எனவே, நன்மையிலிருந்து நன்மை பிறக்கின்றது. அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கான வழிகள் திறந்து கொண்டேயிருக்கும். நான் இதற்கு முன்பு கூறியது போன்றே நாம் இறைவனின் விருப்பத்தைப் பெறுவதற்கும் நம்மிடம் தூய மாற்றங்களைப் பெறுவதற்கும் நம்மிடம் தூய மாற்றங்களை உருவாக்குவதற்குமே இங்கு வந்துள்ளோம். இது நோக்கமாக இருக்கும்போது சொற்பொழிவுகளைக் கேட்டு விட்டு அறிவுப்பூர்வமான ரசனையைப் பெறுவதனால் மட்டும் இந்த நோக்கத்தை நாம் பெற முடியாது. எதுவரை நாம் நம்மிடம் செயலளவிலான மாற்றத்தை ஏற்படுத்தவில்லையோ அதுவரை இந்த நோக்கத்தை நாம் நிறைவேற்ற முடியாது. செயலளவிலான மாற்றத்திற்காக எங்கு இறைவனை வணங்கியவாறு இறை வணக்கங்களுக்குரிய உரிமையைச் செலுத்துவோமோ அங்கு உயர்வான ஒழுக்கத்தை வெளிப்படுத்திக் காட்டியவாறு வீணானவற்றிலிருந்து விலகி இருந்து பரஸ்பரம் ஒருவர் மற்றவரது உரிமையையும் செலுத்த வேண்டும். எனவே, இதன் பக்கம் குறிப்பான கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கின்றது. நமது குறைகளைத் திரையிட்டு மறைத்திருப்பது அல்லாஹ் நம் மீது செய்துள்ள அருளாகும். நமது தவறுகள் மற்றவர்களுக்கு முன்னால் தெளிவாக வரவில்லை. அது அல்லாமல் நம்மில் ஒவ்வொருவரும் தம்மை ஆய்வு செய்து பார்த்தால் நம்மிடம் எத்தனை தவறுகள் உள்ளன என்பது தெரிய வரும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது அளவுகோலுக்கேற்ப பார்க்கும்போது நம்மிடம் எத்தனை பலவீனங்கள் இருக்கின்றன? என்பது தெரிய வருகின்றது. இந்த பலவீனங்கள் ஜமாஅத் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அவப்பெயரை ஏற்படுத்துவதற்குக் காரணமாக ஆகி விடலாம். எனவேதான், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது ஜமாஅத்திற்கு போதனை செய்தவாறு உங்களை நம்முடன் தொடர்புபடுத்திக் கூறிய பிறகு நம்மை அவப்பெயருக்கு ஆளாக்கி விட வேண்டாம் என்று கூறியுள்ளார்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 146; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) நமது இறை வணக்கங்களின் தரம் நன்றாக இல்லையென்றால் பிறகு நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அவப்பெயரை ஏற்படுத்துவதற்கான ஒரு வழியாக ஆகி விடுவோம். நமது ஒழுக்கம் நல்லதாக இல்லையென்றால் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அவப்பெயருக்கு ஆளாக்குவதற்குள்ள ஒரு வழியாக ஆகி விடுவோம். நாம் வீணான விஷயங்களில் சிக்கியிருந்தால் நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அவப்பெயரை ஏற்படுத்துவதற்கான ஒரு வழியாக ஆகி விடுவோம். எனவே, அஹ்மதிகளாகிய நம்மீது ஒரு மிகப்பெரும் பொறுப்பு இருக்கின்றது. நாம் நம்மை ஆய்வு செய்து பார்த்துக் கொண்டிருப்பது அவசியமானதாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் போதனை செய்தவாறு இவ்வாறு கூறினார்கள்: ''எவர் தனது ஈமானை நிலைநாட்ட விரும்புகின்றாரோ அவர் பொருத்தமான நற்செயல்களைச் செய்வதில் முன்னேற வேண்டும். இவை ஆன்மீக விஷயங்களாகும். செயல்களின் தாக்கம்

## திருக்குர்ஆனிலிருந்து

நீங்கள், உங்கள் இறைவனிடமிருந்து இறங்கக்கூடிய மன்னிப்பின்பாலும், வானங்கள், பூமி ஆகியவற்றின் மதிப்பைக் கொண்டதும் இறையச்சமுடையோருக்கு ஏற்படுத்தப் -பட்டுள்ளதுமான சொர்க்கத்தின்பாலும் விரைந்து செல்லுங்கள். (3:134)

**ஜலாலுத்தீன்**

ஸயீம், மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், தூத்துக்குடி.

Ph : +91 98409 17179

**O.A.N. DOORS & STEELS**

**O.A.N. டோர்ஸ் & ஸ்டீல்ஸ்**

*All Types of wodden Doors, Skin Doors, Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals*

Ambai Road, (Opp. Karuna Clinic),
Kulavanikarpuram, Tirunelveli - 627 005

O.A. NIJAM - 99947 571772 V.A. SAIT - 99430 30230

கொள்கைகளின் மீது ஏற்படுகின்றது.'' (மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 366; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

எனவே, நான் கொள்கை அடிப்படையில் மிகவும் உறுதியான அஹ்மதியாக இருக்கின்றேன் என்று கூறுவது போதுமானதல்ல. நற்செயல்களும் உயர்வான ஒழுக்கமும் இல்லையென்றால் இவை போதுமானதல்ல. ஏனென்றால், நற்செயல்கள் மற்றும் உயர்வான ஒழுக்கத்தில் ஏற்படும் பலவீனம் ஈமானின் பலவீனத்திற்கு காரணமாக ஆகி விடும்.

பிறகு தொழுகைகளின் பக்கம் கவனமூட்டியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''தொழுகையை உருக்கத்துடன் நிறைவேற்றுங்கள். அதிகமாக துஆ செய்யுங்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 367; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) எனவே, இந்த நாட்களிலும் உங்களது தொழுகைகளில் உருக்கத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதன் மூலம் இறைவனிடம் நமக்கு இருக்கும் தொடர்பு வலுவடைய வேண்டும். இந்த மாநாடுகளில் கலந்து கொள்வதற்கான உண்மையான நோக்கம் இதுவேயாகும். அதாவது, நாம் ஆன்மீகமான முறையில் முன்னேற வேண்டும்.''

பரஸ்பரம் தமக்கிடையே உள்ள தொடர்புகள் மற்றும் ஒருவர் மற்றவரது உணர்வுகளைக் கருத்தில் கொள்வதன் பக்கம் கவனமூட்டியவாறு ஹுஸூர் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ''எவரது ஒழுக்கம் நல்லதாக இல்லையோ எனக்கு அவரது ஈமான் அபாயத்தில் இருப்பது தெரிகின்றது. ஏனென்றால், அவரிடம் ஆணவத்தின் ஒரு வேர் இருக்கின்றது.'' (மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 369; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''ஆணவம் கொள்பவர் மற்றவருக்கு உண்மையான முறையில் அனுதாபம் காட்டுபவராக இருக்க முடியாது. நீங்கள் அனுதாபம் காட்டுவதை முஸ்லிம்களுடன் மட்டும் ஓர் எல்லைக்குட்பட்டதாக ஆக்கிக் கொள்ளாதீர்கள். மாறாக, ஒருவர் முஸ்லிமாக இருந்தாலும் முஸ்லிம் அல்லாதவராக இருந்தாலும் ஒவ்வொருவருடனும் அனுதாபத்துடன் நடந்து கொள்ள வேண்டும்.''

அவர்கள் கூறுகின்றார்கள்: ''இறைவன் அனைவரது ரப் ஆகவும் இருக்கின்றான்.'' அவன் முஸ்லிம்களுக்கு மட்டும் ரப் அல்ல. ஒவ்வொருவருக்கும் ரப் ஆக இருக்கின்றான். ஒருவர் எந்த மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் இறைவன் அவரது ரப் ஆக இருக்கின்றான்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ''குறிப்பாக முஸ்லிம்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்ளுங்கள்.'' மனிதத் தன்மையின் பொருட்டு அனைவரிடமும் அனுதாபத்துடன் நடந்து கொள்ள வேண்டும். பிறகு முஸ்லிம்களிடம் குறிப்பாக அனுதாபம் காட்ட வேண்டும். ''பிறகு இறையச்சமுள்ளவர்கள், நல்லவர்கள் ஆகியோருக்கு இதை விட அதிகமான தனிச்சிறப்பு இருக்கின்றது.'' (மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 371; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) எவர்கள் இறையச்சமுள்ளவர்களாகவும் நல்லவர்களாகவும் இருக்கின்றரோ அவர்களுடன் மேலும் தொடர்பு அதிகமாகி விடுகின்றது. அதிகமாகவும் வேண்டும். எனவே, இந்த போதனைகள்தான் நம்மிடம் ஆன்மீக மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

நம்மில் ஒருவர் மற்றவரிடம் அனுதாபம் காட்டுபவராக இருப்பார். ஆணவத்தை உள்ளத்திலிருந்து வெளியேற்றுபவர்களாக நாம் இருப்போம். நமது சந்ததிகளிடம் நடந்து கொள்வது போன்று நம்மில் ஒருவர் மற்றவருடன் மென்மையுடனும், அன்புடனும், பரிவுடனும் பேசக் கூடியவர்களாக இருப்போம். இந்த விஷயங்கள் நம்மிடம் இருந்தால் நம்மை சில சமயங்களில் சோதனையில் ஆழ்த்துகின்ற அந்த எல்லா சண்டைகளிலிருந்தும் குழப்பங்களிலிருந்தும் நாம் தவிர்ந்திருப்போம். நான் ஏற்கனவே கூறியிருப்பது போன்றே இங்கு மாநாட்டிலும் கூட இப்படிப்பட்ட செயல்கள் வெளிப்பட்டு விடுகின்றன. மீண்டும் நான் கூறுகின்றேன். நாம் இங்கு ஒன்று கூடுவதன் நோக்கம் நமது ஆன்மீகம் மற்றும் செயலளவிலான நிலைமையில் முன்னேறுவதாகும். நாம் முயற்சி செய்தவாறு அல்லாஹ் மற்றும் அவனது அடியார் –களுக்குரிய உரிமையைச் செலுத்துவதன் பக்கம் கவனம் செலுத்துபவர்களாக ஆகும்போதுதான் நாம் இந்த நோக்கத்தை நிறைவேற்ற முடியும். எனவே, இந்த நாட்களில் மிகவும் கவனத்துடன் இந்த விஷயத்தைக் கருத்தில் கொள்ளுங்கள்.

அல்லாஹ் ஒவ்வொருவருக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! மாநாட்டின் அமைப்புடனும் முழுமையான முறையில் ஒத்துழைப்பு கொடுங்கள். நிலைமைகளின் காரணமாக சில சமயங்களில் நுழைவாயில்களின் செக்கிங் செய்வதில் நேரம் அதிகமாக செலவழிந்தால் அதை சகித்துக் கொள்ளுங்கள். தைரியத்துடனும் பொறுமையுடனும் செயல்படுங்கள். பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற எண்ணற்ற ஆண், பெண் பணியாளர்களிடமும் சிறுவர்கள், சிறுமியர்களுக்கு முழுமையாக உங்கள் ஒத்துழைப்பை கொடுங்கள். எவர் எந்த வயதில் இருக்கின்றார் என்பதைப் பார்க்க வேண்டாம். அவர் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை நிறைவேற்றுவதற்காக உங்களிடம் இந்த விஷயங்களைக் கூறுகின்றார் என்பதை உணர்ந்து அதற்கேற்ப நீங்கள் செயல்பட வேண்டும். இவர்களுக்காக அதிகமாக துஆவும் செய்யுங்கள். அல்லாஹ் இவர்களுக்கு சரியான முறையில் தமது பணியைச் செய்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! ஆண்டு மாநாட்டின் அருள்களிலிருந்து உண்மையான முறையில் பயன் பெறுபவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக! மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது துஆக்களுக்கு வாரிசுகளாக நாம் ஆவோமாக!

## அருளுக்குரிய ரமலான் மாதத்தில் தஹ்ரீகே ஜதீது சந்தாவை நூறு சதவிகிதம் முழுமையாகச் செலுத்தியவர்களுக்காக ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் மிகுந்த பரிவுடன் செய்த துஆ

ஒவ்வொரு வருடமும் நடப்பது போன்றே இந்த வருடமும் அருளுக்குரிய ரமலான் மாதத்தின் 29 –வது நாளனன்று அலுவலகத்தின் தரப்பிலிருந்து தஹ்ரீகே ஜதீது சந்தாவை நூறு சதவிகிதம் முழுமையாகச் செலுத்திய தூய உள்ளம் கொண்ட ஜமாஅத் சகோதரர்களின் பட்டியல் துஆவிற்காக சய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதைப் பார்த்த பிறகு ஹுஸூர் அவர்கள் கலப்பற்ற தூய உள்ளம் கொண்ட ஜமாஅத் சகோதரர்களுக்காக துஆ செய்துள்ளார்கள்.

ஹுஸூர் அவர்கள் தமது கடிதத்தில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

*அல்லாஹ் இந்த அனைத்து ஜமாஅத் சகோதரர்களின் வீடுகளையும் தனது அருள்களாலும் கருணையாலும் நிரப்புவானாக! அவர்களது பொருள்களிலும் உயிர்களிலும் அளவற்ற பரக்கத்துகளை வழங்குவானாக! வருங்காலத்திலும் கூட தியாகங்களின் உயர்ந்த தரத்தை நிலைநாட்டு –வதற்கான நல்வாய்ப்பை அவர்களுக்கு வழங்கிக் கொண்டே இருப்பானாக! அல்லாஹ் உங்கள் அனைவரையும் எப்போதும் நேரான வழியில் முன்னேறிச் செல்ல வைப்பானாக! தனது அன்பிற்குரியவர்களின் நெருக்கத்தை உங்களுக்கு வழங்குவானாக! மார்க்க, உலக நன்மைகளுக்கு உங்களை வாரிசாக்குவானாக! ஆமீன்.*

அல்லாஹ் ஹுஸூர் அவர்களின் துஆக்களிலிருந்து நாமும் பலன் பெறும் வகையில் அவற்றை ஏற்றுக் கொள்வானாக! கலப்பற்ற மனத்தூய்மையுடனும் நன்றியுணர்வுடனும் மிக அதிகமாக தியாகங்கள் செய்வதற்கான நல்வாய்ப்பினை நமக்கு வழங்கிக் கொண்டே இருப்பானாக! ஆமீன். [வகீலுல் மால் தஹ்ரீகே ஜதீது]

## 122 –வது காதியான் ஆண்டு மாநாடு [ஆண்டு மாநாடு தொடங்கப்பட்டதிலிருந்து 125 –வது வருடம்]

*ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் காதியான் ஆண்டு மாநாட்டை 2016 ஆம் ஆண்டு டிசம்பர் 26, 27, 28 (திங்கள், செவ்வாய், புதன் கிழமைகளில்) தேதிகளில் நடத்துவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்கள். ஜமாஅத் சகோதரர்கள் இப்போதிருந்தே துஆக்களுடன் இந்த அருளுக்குரிய ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்ளும் எண்ணத்துடன் அதற்காக தயாராகத் தொடங்கி விடுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இறைவனுக்காக நடத்தப்படும் இம்மாநாட்டிலிருந்து அருள்களைப் பெறுவதற்கான நல்வாய்ப்பை நமக்கு வழங்குவானாக! ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றிகரமாக நடப்பதற்கும் நல்ல ஆன்மாக்கள் நேர்வழியைப் பெறுவதற்கும் அது காரணமாக இருப்பதற்கும் நீங்கள் தொடர்ந்து துஆ செய்யுங்கள்.*

*(தலைமையக நாஸிர் இஸ்லாஹோ இர்ஷாது)*

# 2016 ஆம் ஆண்டு மே மாதம் 17 -ஆம் தேதி சுவீடனின் தலைநகரான ஸ்டாக்ஹோமில் நடைபெற்ற ஒரு வரவேற்பு நிகழ்ச்சியில் ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் எழுச்சிமிகு சொற்பொழிவைக் கேட்டு விருந்தினர்களுக்கு ஏற்பட்ட தாக்கங்கள்

*(தொகுதி 1 இதழ் 29-ன் தொடர்ச்சி...)*

★ ஒரு விருந்தினரான Mr. Stig தனது எண்ணங்களை வெளிப்படுத்தியவாறு இவ்வாறு கூறினார்: இது உள்ளத்தை மிகவும் ஈர்க்கக்கூடிய ஒரு சொற்பொழிவாகும். நான் இன்றைய நாளுக்கு முன்னதாக ஒருபோதும் எவரும் இஸ்லாம் தொடர்பாக இந்த தொனியில் பேசியதைப் பார்க்கவில்லை. கலீஃபா அவர்கள் உலகிலுள்ள பல்வேறு பிரச்சனைகளைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். மேலும் அமைதியை நிலைநாட்டுங்கள் என்ற போதனையையே செய்தார்கள். இன்றும் வருங்கால தலைமுறைக்கும் கூட இந்த தூதுச் செய்தியே தலைசிறந்த தூதுச் செய்தியாகும். கலீஃபா அவர்கள் மிகவும் அழகிய முறையில் அமைதி பற்றி பேசிக் கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களை மிகவும் மதிக்கிறேன்.

★ ஒரு விருந்தினரான Mrs. Sibylla தனது எண்ணங்களை வெளிப்படுத்தியவாறு இவ்வாறு கூறினார்: கலீஃபா அவர்கள் வழங்கியுள்ள தூதுச் செய்தியே அசல் தூதுச் செய்தியாகும். இந்த தூதுச் செய்தியைத்தான் எல்லா மதங்களும் அது ஆரம்பத்தில் தோன்றியபோது வழங்கியிருக்கின்றது. ஒவ்வொரு மார்க்கத்தின் அடிப்படை போதனையும் இதுவேயாகும். கலீஃபா எல்லாரையும் ஒரு விஷயத்தின் பக்கம் அழைத்துக் கொண்டிருக் -கின்றார்கள். அவர்கள் கூறிய விஷயங்களைக் கேட்டு மதம் உலகிலுள்ள பிரச்சனைகளுக்கு காரணமானது அல்ல என்பதில் எனக்கு உறுதி ஏற்பட்டு விட்டது. முஸ்லிம்களுடன் நமக்கு கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன என்றால் அவை மத ரீதியிலான கருத்து வேறுபாடுகள் அல்ல. மாறாக, அவை நாகரீகத்துடன் தொடர்புடைய கருத்து வேறுபாடுகள் ஆகும். ஒருவர் மற்றவருக்கு மதிப்பளிக்க வேண்டும். பரஸ்பரம் ஒருவர் மற்றவரிடம் கருத்து வேறுபாடு கொள்வதிலிருந்து தவிர்ந்திருங்கள் என்ற கலீஃபாவின் தூதுச் செய்தி மிகவும் சாதாரணமானதாகும். அமைதியை நிலைநாட்டுவதற்காக கலீஃபா அவர்கள் செய்கின்ற முயற்சிகளை நான் மிகவும் கண்ணியமிக்க பார்வையுடன் பார்க்கின்றேன். இன்றைய நாளுக்கு முன்னதாக எனக்கு இஸ்லாம் தொடர்பாக கொஞ்சம் தெரிந்திருந்தது. ஆனால், இன்று அதைப் பற்றி எனக்கு அதிகமாக தெரிந்து விட்டது. நான் திருக்குர்ஆனை படிக்க முயற்சி செய்வேன் என்றும் நான் முடிவெடுத்துள்ளேன். கலீஃபா அவர்கள் எனது எதிர்காலம் பற்றிய ஒரு புதிய நம்பிக்கையை எனக்கு தந்துள்ளார்கள்.

★ Gonam என்ற ஒரு விருந்தினர் தனது எண்ணங்களை வெளிப்படுத்தியவாறு இவ்வாறு கூறினார்: கலீஃபா அவர்களின் சொற்பொழிவு உள்ளத்தை மிகவும் ஈர்க்கக் கூடியதாக இருக்கின்றது. இந்த அளவு பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்நிகழ்ச்சிக்கு வந்திருப்பதைப் பார்த்து எனக்கு வியப்பாக இருக்கின்றது. எல்லா பாராளுமன்ற உறுப்பினர்களும் உங்களுடனும் உங்களது திட்டங்களுடனும் இணைந்து நிற்கின்றனர் என்பதற்கு இது ஆதாரமாக இருக்கின்றது. கலீஃபா அவர்களைப் பார்ப்பதும் அவர்களது அமைதியின் தூதுச் செய்தியைக் கேட்பதும் மிகவும் நன்றாக இருந்தது. கலீஃபாவின் தூதுச் செய்தி இக்காலத்திற்கு மிகவும் அவசியமானதாகும். கலீஃபா அவர்களைப் பார்க்கும்போது அவர்கள் மிகவும் கருணையுள்ளம் கொண்டவர்கள் என்பதும் ஆன்மீகத் தலைவர் என்பதும் தெரிய வருகின்றது. கலீஃபா அவர்கள் எவற்றையெல்லாம் கூறினார் -களோ அவற்றை திருக்குர்ஆன் வசனங்களின் ஒளியிலேயே கூறினார்கள். அவர்கள் கூறுவதே இஸ்லாத்தின் போதனைகளாகவும் இருக்கின்றது என்பதை அது நிரூபிக்கின்றது. திருக்குர்ஆனின் சொற்கள் தன்னகத்தே மிகவும் ஈர்ப்புத் தன்மையைக் கொண்டவையாக இருக்கின்றன. அவர்கள் அகதிகளின் நெருக்கடி தொடர்பாக எந்த அளவு எடுத்துக் கூறினார்கள் என்பதைப் பார்த்து நான் வியப்படைந்தேன். ஏனென்றால், பெரும்பாலான மார்க்கத் தலைவர்கள் இந்த தலைப்பில் பேசுவதை விட்டும் விலகியே இருக்கின்றனர். ஒரு பெண் மருத்துவமனையில் அவளுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்கப்படுவதிலிருந்தும் தடுக்கப்பட்டுள்ளார் என்ற Case பற்றி எனக்கு தெரியாது. இதிலிருந்து அவர்களது அறிவு எவ்வளவு விரிவானது என்பதையும் அவர்கள் எந்த அளவு எங்களை கருத்தில் கொண்டுள்ளார் என்பதும் தெரிய வருகின்றது. இடம்பெயர்ந்து வந்தவர்கள் பொறுப்புணர்வுடன் செயல்படவில்லையென்றால் அதன் தீய விளைவுகள் வெளிப்படும் என்று கலீஃபா அவர்கள் கூறினார்கள். கலீஃபா அவர்கள் உலகில் பிரிவினையைத் தடுக்க விரும்புகின்றார்கள். இது புகழத்தக்க ஒரு விஷயமாகும். அவர்கள் எங்களை எச்சரித்துள்ளார்கள். அதாவது இரு பிரிவினரும் (அதாவது இடம்பெயர்ந்து வந்தவர்களும் உள்ளூர்வாசிகளும்) அமைதியை நிலைநாட்டு -வதற்காக தமது பொறுப்புகளை நிறைவேற்றாமல் இருந்தால் பிறகு அதன் விளைவுகளின் தொடர் சங்கிலி (Chain reaction) ஆரம்பமாகி விடலாம் என்று அவர்கள் கூறியுள்ளார்கள். உங்களது தலைவர் ஒரு மிகச் சிறந்த சொற்பொழிவாளர் ஆவார் என்றும் நான் கூற விரும்புகின்றேன். அவர்கள் பேசிய விதம் என்னை உலுக்கி விட்டது. நீங்கள் அவர்களை Your Holiness என்று கூறுகின்றீர்கள். ஆனால், நான் அவர்களை Your Highness என்றே கூற விரும்புகின்றேன்.

★ ஒரு விருந்தினரான Gunner Hendrikson அவர்கள் தமது உணர்வுகளை இந்த சொற்களில் வெளிப்படுத்தியுள்ளார்: மிக நல்ல நிகழ்ச்சியாக இது இருந்தது. கலீஃபா அவர்கள் அகதிகள் நெருக்கடி தொடர்பாக மேற்கொண்டுள்ள ஆய்வு மிகவும் சிறப்பாக இருந்தது. கலீஃபா அவர்கள் மிகவும் ஞானம் நிறைந்த விஷங்களைக் கூறியுள்ளார்கள். அவர்கள் தமது கூற்றில் உண்மையாளராக இருக்கின்றார்கள். எல்லா முஸ்லிம்களுக்கும் அவர்களை அமைதி மற்றும் உண்மையின் பக்கம் கொண்டு வருவதற்கு உங்களது கலீஃபாவை போன்ற ஒரு தலைவர் இருக்க வேண்டும் என்பது எனது விருப்பமாகும். ஒரு கேள்வியை மட்டும் கேட்கின்றேன். உங்களது பெண்கள் எங்கு இருக்கின்றனர்?

★ காவல்துறையைச் சார்ந்த Aanon என்பவரும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். அவர் தனது எண்ணங்களை வெளிப்படுத்தியவாறு இவ்வாறு கூறினார்: கலீஃபா அவர்களின் சொற்பொழிவு மிகவும் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருந்தது. நாங்கள் இங்கு சுவீடனில் கூட பாதிப்பிற்கு ஆளாகியிருக்கின்றோம். நாங்களும் ஆபத்தில் இருந்து வெளியில் இல்லை என்று கலீஃபா அவர்கள் சரியான விஷயத்தை கூறியுள்ளார்கள். நான் பல நேரங்களில் சென்று கலந்து கொண்டிருக்கின்ற அந்த எல்லா நிகழ்ச்சிகளை விடவும் இந்த நிகழ்ச்சி மிகவும் அமைதி நிறைந்ததாக இருந்தது. இஸ்லாத்தின் தலைவரின் அமைதியின் தூதுச் செய்தியைக் கேட்பதற்காக எல்லா துறைகளுடனும் தொடர்புள்ள மக்கள் ஒன்று கூடியுள்ளனர். இங்கு வந்தது எனது நற்பேறாகும். ஏனென்றால், நிச்சயமாக கலீஃபா அவர்கள் ஒரு மகத்தான தலைவராக இருக்கின்றார். கலீஃபா அவர்கள் நாம் நமக்கிடையிலுள்ள கருத்து வேறுபாடுகளை மறந்து ஒருமித்த கருத்துகளையுடைய விஷயங் -களின் பக்கம் நமது சிந்தனை இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார்கள். அகதிகளின் நெருக்கடி என்பது மிகவும் முக்கியமான ஒரு பிரச்சனை ஆகும். ஒருவர் மற்றவருக்கு கண்ணியமளிப்பதை நிலைநாட்டுவதன் மூலமாகவே இந்த விஷயத்திற்கு தீர்வு காண முடியும். நிச்சயமாக இன்று நான் இஸ்லாம் தொடர்பாக பலவற்றையும் கற்றுக் கொண்டிருக்கின்றேன்.

★ பாராளுமன்ற உறுப்பினரான Mr. Valter அவர்கள் தமது எண்ணங்களை வெளிப்படுத்திய -வாறு இவ்வாறு கூறுகின்றார்: அதிகளின் நெருக்கடி தொடர்பாக கலீஃபா அவர்களின் ஆய்வு எனக்கு மிகவும் பிடித்திருந்தது. இது தற்காலத்தில் பேச வேண்டிய தலைப்பாகும். கலீஃபா அவர்களின் எண்ணங்கள் பற்றி எங்களுக்கு தெரிய வந்திருப்பது மிகவும் நல்ல விஷயமாகும். கலீஃபா அவர்கள் இரு பிரிவினருக்கும் (உள்ளூர்வாசிகளுக்கும் இடம்பெயர்ந்து வந்தவர்களுக்கும்) பொறுப்புகள் உள்ளன என்று கூறினார்கள். ஐக்கிய நாட்டு சபையும் தான் செய்துள்ள பெரும் பெரும் வாக்குறுதிகளையும் அது நிறுவப்பட்டதன் அடிப்படை நோக்கங்களையும் நிறைவேற்ற வேண்டும் என்றும் கலீஃபா அவர்கள் கூறினார்கள். கலீஃபா எங்கு சென்றாலும் அமைதியைப் பரப்புகின்றார்கள்.

★ Mr. Beng என்ற ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தனக்கு ஏற்பட்டுள்ள தாக்கத்தைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார்: "உலகின் ஒரு மாபெரும் தலைவர் சுவீடன் வந்துள்ளார் என்பது எங்களுக்கு மிகவும் பெருமைக்குரிய விஷயமாகும்."

இந்த பாராளுமன்ற உறுப்பினர் ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் சொற்பொழிவு தொடர்பாக தமது

**EDITOR**
MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
RAFEEQ AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

Title Code: PUNTAM00001

*The Weekly* **BADAR** *Qadian*

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

**Vol. 1** **Thursday 6 OCTOBER 2016** **Issue No. 31**

**MANAGER**
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com
**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/-

எண்ணங்களை வெளிப்படுத்தியவாறு இவ்வாறு கூறினார்: "இது ஒரு மகத்தான நபரின் மகத்தான சொற்பொழிவாகும். கலீ∴பா அவர்களின் தூதுச் செய்தி சுவீடனுக்கு மாத்திரம் உரியதல்ல. மாறாக, அது முழு ஐரோப்பாவிற்கும் உரியதாகும். இன்னும் சொல்வதென்றால் அது முழு உலகிற்கும் உரியதாகும். உலகளாவிய தலைவர்கள் அமைதிக்காக முயற்சி செய்ய வேண்டும். அவர்கள் தமது சமுதாயங்களை அன்பினால் வெல்ல வேண்டும் என்பதே அந்த தூதுச் செய்தியாகும். கலீ∴பா அவர்கள் இடம்பெயர்ந்து வந்தவர்களுக்கு அவர்கள் உள்ளூரிலுள்ள சமுதாயத்துடன் ஒன்றிவிட வேண்டும் என்பதைப் பற்றி கவனமூட்டினார்கள். நிச்சயமாக கலீ∴பா அவர்கள் எனக்கும் என்னுடன் இருக்கின்ற பாராளுமன்ற நண்பர்களுக்கும் பல விஷயங்களையும் சிந்திப்பதற்காக தந்துள்ளார்கள்.

★ ஒரு காவல்துறையைச் சார்ந்த Jorgon Karlsson அவர்கள் தமது எண்ணங்களை வெளிப்படுத்தியவாறு இவ்வாறு கூறினார்: நிகழ்ச்சி தொடங்குதற்கு முன்னதாக பாதுகாப்பு தொடர்பாக நான் மிகவும் கவலை அடைந்திருந்தேன். ஆனால், இங்கு வந்து பார்க்கும்போது மிக நல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இவர் மேலும் இவ்வாறு கூறினார்: கலீ∴பா இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வது எனக்கு மிகவும் பெருமைக்குரிய விஷயமாகும். நாம் கடந்து சென்று கொண்டிருக்கின்ற இந்த ஆபத்தான காலக்கட்டத்தில் கலீ∴பா அவர்களின் இந்த தூதுச் செய்தி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றது. மனிதர்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வதன் முக்கியத்துவத்தை நமக்கு உணர்த்துகின்ற காலத்தின் கலீ∴பா போன்ற ஒரு மாமனிதர் நம்மிடையே இருக்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

★ ஒரு விருந்தினர் தனது எண்ணங்களை வெளிப்படுத்தியவாறு இவ்வாறு கூறினார்: கலீ∴பா அவர்களின் சொற்பொழிவு மிகவும் மகத்துவம் வாய்ந்ததாக இருந்தது. சொற்பொழிவு முடிந்து விடக்கூடாது என்றே உள்ளம் விரும்பியது.

★ இவ்வாறே இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சுவீடனைச் சார்ந்த ஒரு பெண்மணியான Miss Anna அவர்கள் தனது எண்ணங்களை வெளிப்படுத்தியவாறு இவ்வாறு கூறினார்கள்: பல மக்களும் உண்மை பேசுவதாக வாதம் செய்கின்றனர். ஆனால், அவர்கள் கூறும் விஷயங்களை நீங்கள் கேட்கும் போதுதான் உண்மை நிலை பற்றிய அறிவு உங்களுக்கு தெரிய வருகின்றது. இன்று மாலை எனக்கு உண்மையையே கேட்க முடிந்தது.

★ ஒரு விருந்தினர் தமது எண்ணங்களை வெளிப்படுத்தியவாறு இவ்வாறு கூறினார்: அமைதியை நிலைநாட்டுவது தொடர்பாக கலீ∴பா கூறிய விஷயங்கள் எனக்கு மிகவும் பிடித்திருந்தன. குறிப்பாக ஒரு முஸ்லிம் தலைவரிடமிருந்து அமைதியின் தூதுச் செய்தியைக் கேட்டது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. எல்லா முஸ்லிம்களின் சிந்தனையும் அஹ்மதி முஸ்லிம்கள் போன்று இருக்க வேண்டும் என்பது எனது விருப்பமாகும். இவ்வாறு மத்திய கிழக்கு நாடுகளிலும் உலகின் ஏனைய பகுதிகளிலும் அமைதி நிலைபெற்று விடும்.

★ நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஒரு விருந்தினர் தனக்கு ஏற்பட்ட தாக்கங்களை வெளிப்படுத்தியவாறு இவ்வாறு கூறுகின்றார்: எனது கருத்தின் படி கலீ∴பா அவர்கள் தமது சொற்பொழிவை மிகவும் சிந்தித்து முழுமையாக ஆயத்தம் செய்தவாறு எழுதியிருந்தார்கள். ஏனென்றால், அவர்கள் சுவீடனின் உள்நாட்டு நிலைமைகளைப் பற்றி நன்றாகவே கணித்திருந்தார்கள். இங்கு சுவிடனில் இருக்கின்ற அகதிகள் தொடர்பாக உள்ள பிரச்சனைகள் பற்றிய அவர்களது சிந்தனை மிகவும் தனிச்சிறப்பு மிக்கதாக இருக்கின்றது. அடைக்கலம் புகுந்துள்ள இவர்கள் மீதும் சில பொறுப்புகள் உள்ளன என்று கலீ∴பா அவர்கள் கூறினார்கள். இது எத்தகைய விஷயம் என்றால் சுவீடனிலுள்ள அரசியல்வாதிகள் கூட இதைப் பற்றி ஒருபோதும் எதுவும் கூறுவதில்லை.

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

பேன்கள் அதிகமாயின; தவளைகள் பெருகின; இரத்தம் ஓடியது; பொதுவான பஞ்சம் நிலவியது. ஆனால், எகிப்து நாட்டின் தொலை தூரப் பகுதிகளில் வாழ்ந்த குடிமக்களுக்கு ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களைப் பற்றிய செய்தியே தெரியாமல் இருந்தது. இதில் அவர்களது எந்தப் பாவமும் இருக்கவில்லை. இது மட்டுமல்லாமல் எகிப்துவாசிகள் அனைவரது எல்லா அப்பாவி ஆண் குழந்தைகளும் கொல்லப்பட்டனர். மேலும் ஃபிர்அவ்ன் ஒரு காலக்கட்டம் வரை இந்தப் பேரழிவுகளிலிருந்து பாதுகாப்பாக இருந்தான். ஆனால் முற்றிலும் (ஒரு நபியின் வருகை பற்றி) அறியாமல் இருந்தவர்கள் முதலில் கொல்லப்பட்டனர். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் காலத்தில் எந்த மக்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை சிலுவையில் அறைந்து கொலை செய்ய விரும்பினார்களோ அவர்களது முடியைக் கூட எவராலும் அசைக்க முடியவில்லை. அந்த மக்கள் சுகமாக வாழ்ந்து வந்தனர். ஆனால், நாற்பது வருடங்களுக்குப் பிறகு அந்த நூற்றாண்டு கழிந்த பிறகு தெய்தூஸ் என்ற ரோமானியரின் கைகளால் ஆயிரக்கணக்கான யூதர்கள் கொலை செய்யப்பட்டனர். பிளேக்கும் பரவியது. இந்த தண்டனை ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் காரணமாக மட்டுமே வந்தது என்பது திருக்குர்ஆனில் இருந்து நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

அவ்வாறே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் ஏழு வருடங்கள் பஞ்சம் நிலவியது. பெரும்பாலும் இந்த பஞ்சத்தினால் ஏழைகளே மரணித்தனர். குழப்பத்தைத் தூண்டுகின்ற துன்பங்களைத் தருபவர்களாக இருந்த பெரும் பெரும் தலைவர்கள் ஒரு காலக்கட்டம் வரை தண்டனையில் இருந்து தப்பித்து வந்தனர்.

சுருக்கமாக கூறுவதென்றால், அல்லாஹ்வின் நடைமுறை இவ்வாறே இருந்து வருகின்றது. ஒருவர் இறைவனிடமிருந்து வரும்போது அவர் பொய்ப்படுத்தப்படுகின்றார். அப்போது பலவகையான பேரழிவுகள் வானத்திலிருந்து இறங்குகின்றன. அதனால் பொய்ப்படுத்தியதுடன் அறவே தொடர்பு இல்லாத அத்தகைய மக்களே பெரும்பாலும் பிடிக்கப்படுகின்றனர். பிறகு படிப்படியாக நிராகரிப்பவர்களின் தலைவர்கள் பிடிக்கப்படுகின்றனர். எல்லாவற்றிற்கும் இறுதியாக பெரிதும் தீங்கிழைப்பவர்களது நேரம் வருகின்றது. இதன் பக்கமே அல்லாஹ் أَنَّا نَأْتِي الْأَرْضَ نَنْقُصُهَا مِنْ أَطْرَافِهَا அதாவது, நாம் மெதுமெதுவாக பூமியின் பக்கம் வந்து போய்க் கொண்டிருக்கின்றோம் என்று கூறுகின்றான். இந்த எனது விளக்கத்தின் மூலமாக சில அறிவற்றவர்களின் ஆட்சேபனைகளுக்கான பதிலும் வந்து விட்டது. மல்லவிகளே மறுத்தனர். ஆனால் ஏழை மனிதர்கள் பிளேக்கால் மரணித்து விட்டனர் என்று அவர்கள் கூறுகின்றனர். காங்டா மற்றும் பாக்ஸோவின் மலைகளில் இருந்த நூற்றுக்கணக்கான மனிதர்கள் பூகம்பத்தினால் அழிந்து விட்டனர். அவர்கள் என்ன குற்றம் புரிந்தனர் ? அவர்கள் எதனை பொய்ப்படுத்தினர் ? என்றும் அவர்கள் கேட்கின்றனர்.

எனவே, நினைவில் கொள்ளுங்கள். இறைவனின் ஒரு தூதர் பொய்ப் -படுத்தப்படும்போது குறிப்பிட்ட ஒரு சமுதாயம் அவரை பொய்ப்படுத்தினாலும் சரி அல்லது பூமியின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் (உள்ளவர்கள்) அவரை பொய்ப்படுத்தினாலும் சரி இறைவனின் தன்மான உணர்வானது பொதுவான தண்டனையை இறக்குகிறது. விண்ணிலிருந்து பொதுவாக துன்பங்கள் இறங்குகின்றன. பெரும்பாலும் இவ்வாறே நடக்கின்றது. உண்மையில் தீங்கிழைப்பவர்கள் பின்னாலிருந்தே பிடிக்கப்படுகின்றனர். அவர்களே உண்மையில் குழப்பத்தின் உறைவிடமாக இருக்கின்றனர். உதாரணமாக, ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் ஃபிர்அவ்னுக்கு முன்னால் காட்டிய அந்த கோபத்தின் அடையாளங்களால் ஃபிர்அவ்னுக்கு எந்த இழப்பும் ஏற்படவில்லை. ஏழைகள் மட்டுமே கொல்லப்பட்டனர். ஆனால், இறுதியில் இறைவன் ஃபிர்அவ்னை அவனது படையுடன் மூழ்கடித்தான். இது இறைவனின் நடைமுறையாகும். இதை அறிந்த எவராலும் அதை மறுக்க முடியாது.

(ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக்கம் 164-167)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad